REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 12உ வெள்ளி (25—1—57) ★ ★ வெளியீடு: தை 13உ சனி (26—1—57) [இதழ் 196

'கடல் ஓநாய்' — அணுசக்தியால் இயங்கும் இரண்டாவது நீர்மூழ்கி!

அமெரிக்காவின் இரண்டாவது அணுசக்தி நீர்மூழ்கியான 'கடல் ஓநாய்' வெள்ளோட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறதாம்!

இது 6 30 00 000 டாலர் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. 'நாட்டிலஸ்' என்ற உலகத்தின் முதல் அணுசக்தி நீர்மூழ்கியைவிட இந்த 3 260 டன் நீர்மூழ்கி பெரியது; விரைவாய்ச் செல்வது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

'தெற்கில் இந்தி என்றும் வளர்ச்சி பெருது'

'நீதிமன்ற மொழியாக இந்தியை ஆக்குவதும் விரைவில் நடைபெருது'

'25 ஆண்டுக் காலத்திற்குள்ளாகவும் ஆங்கிலத்தின் இடத்தை இந்தியால் பெற முடியாது'

அவ்வாறு கருதுவோர் தங்களை ஏமாற்றிக் கொண்டவர்களாவர்

இந்தி மொழி குறித்து உள்நாட்டுத் துறை, சட்டத் துறை முதன்மை அதிகாரிகளின் கருத்து

"எதிர்பார்க்கக்கூடிய கால அளவிற்குள், இந்தியை நீதிமன்ற மொழியாக ஆக்குவது என்பது மிக மிகக் கடினமானதாகும்.

"தற்கால சட்ட நுணுக்கங்களை இந்திய மொழிகளில் உணர்த்துவது என்பதும் கடினமானதாகும்.

"25 ஆண்டு காலத்திற்குள்ளாக ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பெற்றுவிடும் எனக் கருதுபவர்கள், தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டவர்களாவர்

"தென்னிந்தியாவில் இந்தி மொழி மிக மெள்ள வளர்ச்சி பெறுகிறது. மொழிவழி ஏற்பாட்டிற்குப் பிறகு, தெற்கில் இந்தி வளர்ச்சி பெறுவது அறவே முடியாது என்பதே என் நம்பிக்கை."

இவ்வாறு, சட்ட ஆய்வுக் குழுவிடம் சென்னை அரசாங்கச் சார்பில் சாட்சியங்கூறிய சென்னை அரசாங்க உள்நாட்டுத் துறைத் தலைமை அலுவலர் லோபோ பிரபு அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்.

அதே கருத்தை சென்னை அரசாங்க சட்டத் துறைத் தலைமை அலுவலரான ஏ. அழகிரிசாமி அவர்களும் ஆதரித்துள்ளார்.

அவர் மேலும் இது பற்றி கூறியதாவது:—

"ஜெர்மனியிலும் பிரான்சிலும் முறையே ஜெர்மன் மொழியும் பிரெஞ்சு மொழியும் நீதிமன்ற மொழிகளாக இருக்கின்றனவே என்ருல், அம்மொழிகளிலேயே சட்டங்கள் துவக்க முதல் தோன்றி ஆக்கப்பெற்று வந்திருப்பதே காரணமாகும். இந்தி மொழிக்கு அத்தகைய சிறப்பு இருக்கவில்லை அத்தகு வளர்ச்சி இந்திக்கு இயற்கையாக ஏற்படவேண்டுமென்ருல், அது ஒரு நீண்டகால வளர்ச்சி முறையாகத்தான் இருக்கமுடியும்."

நேரு பண்டிதரை எதிர்த்து!

தாட்டே போட்டியிடுவாராம்

பம்பாய், ஜன. 23—

பண்டித நேருவை எதிர்த்து மக்கள் சபைக்கு அலகாபாத் மாவட்டத்திலிருந்து 'அகில இந்திய இந்துராஜ்' கட்சியின் செயலாளர் தாட்டே என்பார் போட்டியிடவிருக்கிருராம்.

நிபந்தனை

ஆனல் நேருவை எதிர்த்துப் போட்டியிடாமலிருக்க வேண்டுமாஞல் ஒரு நிபந்தனை—பண்டித நேரு, இந்தியாவில், 'பசு வதை'யைத் தடைசெய்ய வேண்டுமாம்; அத்துடன், பம்பாய் உள்ளிட்ட ஐக்கிய மராட்டியமும் மகா குஜராத் மாநிலமும் அமைப்பதாக உறுதிமொழி கூறவேண்டுமாம் — இது தான் அவரது நிபந்தனையாம்!

'சேலத்திலா தொழிற்சாலை?' என்று கேலி பேசிய டி. டி. கே.!

தென்னுட்டில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு முயற்சிக்கிருராம்!

தேர்தல் நெருங்கும்போது தமிழர்மீது திடீர் காதல்

சென்னை, ஜன. 24—

சென்னையில் மேலும் முடிந்த அளவு தொழில்களை நிறுவ முயற்சிக்கப்போகிருராம், மத்திய மந்திரியாயிருக்கும் டி. டி. கிருஷ்ணமாச்சாரி!

கடந்த ஐந்தாண்டுக்காலமாக வடவரின் ஏஜெண்டாக வடநாட்டிலேயே மந்திரியாயிருந்த இவர், தன்னைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்த மாநில மக்களுக்காக என்ன செய்தார்—எத்தனை புதிய தொழில்களை நிறுவினர் என்றெல்லாம் மக்கள் கேட்பார்களே என்பதை எண்ணிப்பாராத நிலையில், இங்கு பல சிறு தொழில்களை நிறுவப்போவதாகக் கூறியிருக்கிருர், டி. டி. கிருஷ்ணமாச்சாரி!

ஏற்கனவே சில சிறு தொழில்கள் இங்கு துவக்கியுள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளாராம்!

'அப்பளத் தொழிற்சாலை தானே, டில்லி தந்த கடனுதவியுடன் சென்னையில் துவக்கப்பட்ட தொழிற்சாலை?'—என்று மக்கள் கேட்பார்களே என்பதையும் மறந்துவிட்டு அவர் இப்படிக் கூறினராம்!

வடநாட்டிலேயே எல்லாப் பெரும் தொழில்களும் துவக்கப்படுவதாகக் கூறுவது தவரும்! அங்குதான் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் இருக்கின்றனவாம்! இருந்தாலும், தென்னுட்டிலும் தொழில்கள் துவக்க அவர் முயற்சித்துக் கொண்டிருக்கிருராம்— கூறியிருக்கிருர், அவர்!

இவர் கூறும் முயற்சி எல்லாம், தேர்தலுக்காக அள்ளிவிடப்படும் அண்டப் புளுகுகள் என்பதை, மக்கள் நன்கு அறிவர் என்பதை அவர் உணரவேண்டும்.

ரூ. 14,000 அபராதம்

கபார்கானுக்குத் தண்டனை

லாகூர், ஜன. 24—

செஞ்சட்டைத் தலைவரான கான் அப்துல் கபார்கானுக்கு, இன்று மேற்கு பாகிஸ்தான் உயர் நீதிமன்றம, 'கோர்ட்' கலையும் வரை சிறைத் தண்டனையும் ரூ. 14,000 அபராதமும் விதித்திருக்கின்றது எனத் தெரியவருகிறது.

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் கபார்கான், ஆட்சேபகரமானவகையில் பிரச்சாரம் செய்தாக வழக்கு நடைபெற்றது.

கவர்னர் உருவப்படம் எரிக்கப்பட்டதாம்!

திருவனந்தபுரம், ஜன. 24—

மாணவர்களைப் போலீசார் தாக்கியதைக் கண்டித்து இன்று மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை.

அரசாங்கப் பஸ்களின்மீது கற்கள் எறியப்பட்டன.

கவர்னரின் உருவப்படத்தை எரித்தனர் என்றும் கூறப்படுகிறது.

25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

சர்க்கார் செலவில் காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரமா?

பாட்டும்-கூத்தும் மக்கள் வரிப் பணத்திலா?

சாதனைகளை வானெலி மூலமும் ஒலிபரப்புவதேன்?

நேர்மையான தேர்தல் நடைபெற இந்த விளம்பரம் நிறுத்தப்பட வேண்டும்

"........இந்தப் பிரச்சாரத்தை நிறுத்தாவிட்டால் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் கட்சி, தனது இலாபத்திற்காகச் சர்க்கார் செலவில் பிரச்சாரம் செய்துகொண்டார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாக வேண்டிவரும்"

என்று, திரு. பி. இராமச்சந்திர ரெட்டி, 'மெயில்' இதழுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

24—1—57-ல் தேசிய இதழில் வெளிவந்துள்ள அந்தக் கடிதத்தில் மேலும் காணப்படுவதாவது:—

'பாட்டுக்கள், தெரு நாடகங்கள் மூலம் முதல், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சாரத்தினை, தேசிய விஸ்தரிப்புத் திட்டம், மற்றும் பிரதேச அபிவிருத்தித் திட்டம் ஆகிய இலாகாவினர் துவங்கியிருக்கிருர்கள். இந்தப் பிரச்சாரம வானெலி மூலமும் நடைபெறுகிறது. தேர்தலுக்கு முன்பாக, காங்கிரஸ் சர்க்காரின் சாதனைகளுக்கு இப்படி விரிவான விளம்பரம் தருவது நேர்மையற்ற வழிமுறைகளாகும்.

"திட்டத்தின்கீழ் நிதி, மற்றும் மனித சக்தி இவற்றை ஒன்று கூட்டி பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல், சுயமுயற்சி, கூட்டுறவு இவை போன்ற உயர்ந்த இலட்சியங்களைப் பரப்புவதற்குப் பதிலாக இந்த இலாகாவினர், காங்கிரஸ் சர்க்காரின் சாதனைகளைப் பிரமாதப் படுத்திக் கொண்டிருக்கின்றனர்—புகழ்ந்து கொண்டிருக்கின்றனர். தேர்தலுக்கு முன்பாக இப்படிப் பிரச்சாரம் செய்வது விவேகமானதல்ல. தேர்தல் முடியும்வரை இந்தப் பிரச்சாரத்தை நிறுத்திவைப்பதினுல் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது.

"எனவே பாரபட்சமின்றி நடந்துகொள்ள வேண்டிய தேர்தல் கமிஷன், இந்த வகையான பிரச்சாரம் தற்போதைக்கு நடைபெருமல் உடனடியாக நிறுத்தவேண்டியது மிக அவசியமாகும்."

இந்தக் கடிதம் எழுதியுள்ள பி. இராமச்சந்திர ரெட்டி எம்.பி., அவர்கள், பழம்பெரும் அரசியல் தலைவர்களுள் ஒருவர்; நீதிக் கட்சியிலிருந்தவர்; முன்னைய சென்னை சட்டசபையின் தலைவராக இருந்தவர்; ஆந்திர மந்திரி கோபால ரெட்டியின் நெருங்கிய உறவினர்.

அங்கேரியில் மனித வேட்டை!

புடாபெஸ்ட், ஜன. 25—

கடந்த அக்டோபர், நவம்பர் திங்களில் நடைபெற்ற கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களை மீண்டும் தேடிவருகிறது, கம்யூனிஸ்ட் காதர் அரசாங்கம்! இந்தத் தீவிர நடவடிக்கையின் காரணமாகக் கடந்த இரண்டு நாட்களில 496 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பலருக்கு 5 முதல் 10 ஆண்டுக் காலம வரையில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இராணுவ நீதிமன்றம் ஒன்று மூவருக்கு மரணத் தண்டனை விதித்திருக்கிறது.

நாளை!

★

தி. மு. கழக அபேட்சகர்கள் 2-ம் பட்டியல்

★

சென்னை 26—1—57 (வெளியூர் 27—1—57) 'நம் நாடு' இதழில், ஏற்கனவே வெளியிட்ட பட்டியலில் இரண்டொரு மாற்றங்களும், அடுத்த பட்டியலும் வெளிவருகிறது.

—தலைமைக் கழகம் (தி. மு. க.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 25—1—'57 வெள்ளி

செவிடன் செவியில் ஊதிய சங்கு!

முதன்மை தேர்தல் அதிகாரியாக இருந்துவரும் சுகுமார் சென், வரப்போகும் பொதுத் தேர்தல் குறித்து அடிக்கடி விளக்கம் தந்தவண்ணம் உள்ளார். வாக்களிப்பதில் ஒவ்வொரு வாக்காளரும் கடைப்பிடிக்கவேண்டிய கடமை குறித்தும், அபேட்சகர்கள் பின்பற்றவேண்டிய செயல்முறை பற்றியும் அவர் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியும் வருகிறார்.

தேர்தல் நாளில் ஆங்காங்கே உள்ள தேர்தல் அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டிய முறைபற்றியும் அவர் அறிவுரை கூறிவருகிறார். நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல் நேர்மையாகவும் ஒழுங்காகவும், அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடைபெறவேண்டும் என்பதற்காகவே, இத்தகைய கருத்துரைகளை அவர் கூறிவருகிறார் என்ற உண்மையை எவரும் புரிந்துகொள்ள முடியும். ஆனால் நடைமுறையில் தேர்தல் அதிகாரியின் அறிவுரைகள் எந்த அளவு வெற்றி பெறக்கூடும் என்பதை, இந்த நிலையில் முன்கூட்டியே தெளிவாகக் கூறி விடுவதற்கில்லை.

வாக்காளர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறை குறித்தும் அபேட்சகர்கள் பின்பற்ற வேண்டிய செயல்முறை பற்றியும் அவர் கூறியுள்ள கருத்துரை, மார்க்கத் தலைவர்கள் ஏற்கனவே கூறியுள்ள சுத்த சன்மார்க்க அறநெறி போன்றே ஒலிக்கிறது. அந்த அறநெறியை, வாக்காளர்களும் அபேட்சகர்களும் உணர்வுபூர்வமாக அப்படியே பின்பற்ற முன்வரும் பட்சத்தில், உண்மையிலேயே நல்லறிவாளர்கள் அனைவரும் எதிர்பார்ப்பது போன்றே, பொதுத் தேர்தலில் நேர்மையும் உண்மையும், ஒழுங்கும் செங்கோலேச்சக் கூடும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இதுவரை, நாம நடைமுறையில் கண்டு வந்திருக்கும உண்மைகள், நல்லறிவாளர்களின் தூய விருப்பத்தை நிறைவேற்றக் கூடிய வகையில் அமைந்திருந்ததில்லை என்பதேயாகும.

ஒவ்வொரு அபேட்சகரும் தேர்தல் களத்தில் 'தூய்மையாகவும் கண்ணியமாகவும் போராட வேண்டும்' என்கிறார் முதன்மை தேர்தல் அதிகாரி. இப்புனித போதனையை காங்கிரஸ் அபேட்சகர்கள், இதுவரை தாங்கள் கலந்துகொண்ட தேர்தல்களில் எந்த அளவு பின்பற்றி இருக்கிறார்கள் அல்லது பின்பற்ற நினைத்திருக்கிறார்கள் என்பது சிந்திக்கத்தக்கது.

"ஒழுங்கற்ற முறையில் ஏதாவது ஒரு அபேட்சகர் தனது வாக்கைக் கோருவாரானால், அச்செயலை தனக்கிழைத்த அவமானமாக ஒவ்வொரு வாக்காளரும் கருத வேண்டும்" என்றும் முதன்மை தேர்தல் அதிகாரி முறையிட்டுள்ளார். தேர்தல் அதிகாரி குறிப்பிட்டுள்ளது போல், தங்கள் வாக்குகளை முறையற்ற முறையில் கோரும் அபேட்சகர்களை எவ்வளவு தான் வெறுத்து விரட்ட வாக்காளர்கள் தயாராக இருந்த போதிலும், வாக்காளர்கள் ஒழுங்கீனமாக நடந்துகொள்ள காங்கிரசு அபேட்சகர்கள் வேறு பலப்பல புதுப்புது முறையற்ற முறைகளை அல்லவா இதுவரை கையாண்டு வந்திருக்கிறார்கள். ஒழுங்கற்ற வாக்குகளைப் பெறுவதை மிகச் சிறந்த அறமாக அல்லவா காங்கிரஸ் கட்சியினர் ஆக்கிவிட்டு இருக்கிறார்கள்!

அபேட்சகர்கள் ஒழுங்கற்ற முறையில் தங்கள் வாக்குகளைக் கோருவதை தங்களுக்கு வேண்டுமென்றே இழைக்கும் அவமானமாகத்தான் வாக்காளர்களில் பெரும் பகுதியினர் இப்பொழுதும் கருதிவருகின்றனர். ஆனால் அவர்கள் விருப்பப்படி, தங்கள் வாக்குரிமைகளைச் செயல்படுத்தவிடாது, வாக்காளர்களைத் திட்டமிடுக் கெடுத்துக்கொண்டு வருபவர்கள், காங்கிரஸ் அபேட்சகர்கள் தான் என்பதை முதன்மை தேர்தல் அதிகாரி அறிந்து கொள்ளாமல் இருக்க நியாயமில்லை.

"ஒவ்வொரு அபேட்சகரின் செயல்முறையையும் கூர்மையாகவும் விழிப்பாகவும் கவனித்து, சட்டத்தை மீறியும் ஒழுங்கற்ற முறையிலும் தங்கள் ஆதரவைக் கோரி பொதுவாழ்வை நஞ்சாக்கி இழிவுபடுத்தும் அபேட்சகர்களை நவு இரக்கமின்றி வாக்காளர்கள் வீழ்த்தவேண்டும்" என்றும் கண்டிப்பாக தேர்தல் அதிகாரி முறையிட்டுள்ளார்.

தேர்தல் அதிகாரியின் இம் முறையீட்டை வாக்காளர்கள் பின்பற்றத் தயாராக இருந்தாலும் இல்லாமற்போனாலும், பொதுவாக அபேட்சகர்கள் அனைவரும்-குறிப்பாகக் காங்கிரசுக் கட்சி அபேட்சகர்கள் அனைவரும் பின்பற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தேர்தல் அதிகாரியின் முறையீட்டின்படி காங்கிரசுக் கட்சியினர் நீங்கலாக, மற்ற அபேட்சகர்களில் பெரும்பான்மையினர் நடந்துகொள்ள என்றும் தயாராகவே உள்ளனர். ஆனால் அவர்கள் நடைமுறையினால் மட்டும், காங்கிரசு அபேட்சகர்களால் நஞ்சாக்கப்படும் பொதுவாழ்வைத் தூய்மையானதாக ஆக்கமுடியாது.

எப்படியும் அதிகாரத்தைப் பெறுவது என்ற முடிவில் ஏற்கனவே அதிகாரத்தைச் சுவைத்து உருசி பார்த்திருக்கும் காங்கிரஸ் கட்சியினர், எத்தகைய சட்ட விரோதமாகவும ஒழுங்கற்ற முறையிலும நடந்துகொள்ள இப்பொழுதும் தயாராகவே உள்ளனர். வாக்காளர்களை அச்சுறுத்தியும் ஆசை காட்டியும் இதுவரை பழகிவந்துள்ள காங்கிரஸ் கட்சியினர், இந்தத் தேர்தலில் மட்டும் அறநெறியைப் பின்பற்றி நடந்துகொள்ள முன்வருவர்என எவரும் எதிர்பார்க்க முடியவே முடியாது.

இந்த நாட்டின் பொது வாழ்வு இப்பொழுதும் மாசடைந்துதான் கிடக்கிறது என்பதை விவாதத்திற்காவது மறுப்பவர்கள் இருக்கமுடியாது. பொதுவாழ்வு நஞ்சாகிக் கிடப்பதற்கு முழுவதும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் காங்கிரசுக் கட்சியினரே என்பதும ஒப்பமுடிந்த உண்மையாகும். அதிகார வெறியையும் பணத் திமிரையும் பக்கத் துணையாகக் கொண்டு பொதுத் தேர்தலில் பங்குகொள்ளும் காங்கிரஸ் கட்சியினரிடம, பொது வாழ்வின் புனிதத்தைக் காக்கும பெரும் பணியை எதிர்பார்ப்பது, சிறுத்தையிடம் தனது புள்ளியை மாற்றிக்கொள்ளும் பெருஞ்செயலை எதிர்பார்ப்பது போன்றதேயாகும். எனவே, முதன்மைதேர்தல் அதிகாரியின் ஒழுக்க போதனை, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் செவிடன் செவியில் ஊதிய சங்குக்கு ஒப்பானதேயாகும் என்பதில் ஐயமில்லை.

தேர்தலில் கலந்துகொள்ளும் காங்கிரஸ் கட்சியின் திருக் கல்யாணகுணத்தை முதன்மை தேர்தல் அதிகாரி, நம்மைவிட மிக நன்கு அறிந்திருப்பவரே யாவார். இருந்தாலும், அவர் இவ்வாறு சன்மார்க்க சுத்த நெறி பற்றிப் பேசுவது உலக நல்லறிவாளர்களை மயக்கவே என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

தேர்தல் செலவு

ஒரு வாக்காளருக்கு 4 அணு வீதம் ஆகுமாம்

புதுடில்லி, சன. 23—

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்காகும் செலவு, ஒரு வாக்காளருக்கு நாலணு வீதம் ஆகும் என்று உத்தேசமாக மதிப்பிடப் பட்டிருக்கிறதாம்.

கடந்த தேர்தல்களின்போது ஒரு வாக்காளருக்கு ஒன்பதரை அணு வீதம் செலவாயிற்றும்.

சென்றமுறை, ஓட்டு பெட்டிகள், வாக்காளர் பட்டியல் முதலியன புதிதாகத் தயாரிக்கப்பட்டன என்றும் அதனல் அதிகச் செலவு ஏற்பட்டது என்றும் கூறப்படுகிறது.

19 கோடி வாக்காளர்கள்

இந்தத் தேர்தலில் இந்தியாவில் மொத்தம் 19 கோடி வாக்காளர் உள்ளனர் என்றும், சென்ற தேர்தலில் 18 கோடி வாக்காளரே இருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

ஏகபோக உரிமை

கொண்டாட முடியாதாம்!

இரு துறைகளில் அமெரிக்கா பின்தங்கிக் கிடக்கிறதாம்!

மாஸ்கோ, சன 24—

"அணு ஆயுதங்கள், நீண்ட தூரம் சென்று தாணுகத் தாக்கும் 'ராக்கெட்' என்ற ஆளில்லா இயந்திர ஆயுதங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் அமெரிக்கா ஏகபோக உரிமை கொண்டாட முடியாது; அமெரிக்கா இத்துறையில் பின்தங்கித்தான் இருக்கிறது" என்று, சோவியத் கமயூனிஸ்டுக் கட்சி இதழ் 'பிரவ்டா' தெரிவித்திருக்கிறது.

வியாதிகளைக் குணப்படுத்த

விஞ்ஞானிகள் முயற்சி

மாஸ்கோ, சன. 24—

பைத்தியத்தைத் தெளிய வைக்கவும், நரம்புத் தளர்ச்சி, இருதயக் கோளாறு போன்ற வியாதிகளை குணப்படுத்தவும் 'மின்சாரத் தூக்கம்' முறை ஒன்றை ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனராம்.

மின்சாரம் பாய்ச்சப்பட்டதும் தூக்கம் உண்டாகிறதாம்; தூங்கி எழுந்ததும் வியாதி நீங்கி குணமேற்படுகிறதாம்.

அண்ணு சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

நகராட்சி, ஊராட்சி மன்றங்கள் வரவேற்பு

பழநி, மதுரை, திருச்சி, கணியூரில் 'சந்திரோதயம்' நாடகம்

★

பழநி நகராட்சி மன்ற வரவேற்பு

18—1—57 மாலை 6½ மணிக்கு, பழநி நகராட்சி மன்றச் சார்பில், அண்ணு அவர்கட்கு வரவேற்பு அளிக்கப்பட்டு, துணைத் தலைவர் எஸ். இராசகோபால் அவர்களால் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. அண்ணு அவர்கட்கு மலர்மாலைகளும் சூட்டப்பட்டன.

வரவேற்புகளுக்குப் பதிலளித்த அண்ணு அவர்கள், நகர மன்றத் தலைவருக்குத் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

பின்னர், நகர் மன்ற உறுப்பினர்கள், ஆணையாளர், மற்றும் பலரும் அண்ணு அவர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

பொதுக்கூட்டம்

அன்று இரவு 7½ மணிக்கு, ரேடியோ திடலில், தோழர் எஸ் இராசகோபால் தலைமையில், தி மு கழகத் தேர்தல் நிதியளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தா. ஆவுடையப்பன், அ. பொன்னம்பலனுர் ஆகியோர் சிறிது நேரம் பேசியபின், அண்ணு அவர்கள் தேர்தலில் நமது கடமை குறித்துப் பேசினுர்கள். பழநி வட்டச் சார்பில். தி மு. கழகத் தேர்தல் நிதியாக ரூ 500 அண்ணு அவர்களிடம் தரப்பட்டது. கூட்டத்திற்கு முன் ஊர்வலமும் நடைபெற்றது.

நாடகம்

இரவு 11 மணிக்கு, பிரேபோ தியேட்டரில், அண்ணு அவர்களும் மற்றும் கழகத் தோழர்களும் நடிக்கும் 'சந்திரோதயம்' நாடகம் நடைபெற்றது. நாடக மூலம் வசூலான ரூ. 4,126ம் அண்ணு அவர்களிடம் தோழர் நாராயணன் அவர்கள் கொடுத்தார்கள். தோழர் ஜோசப் ஆனந்தன் அவர்கள் 301 காலணுக்களும், தோழர் கருப்பண்ணன் அவர்கள் 501 காலணுக்களும் கொண்ட பண முடிப்புகளை தேர்தல் நிதியாக அண்ணுவிடம் தந்தனர். நிதியைப் பெற்றுக்கொண்ட அண்ணு அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டு, அப்பகுதியில் தேர்தலில் போட்டியிடும் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள்வெற்றி பெறப் பொதுமக்களும் கழகத் தோழர்களும் ஆதரவும உழைப்பும் தருமாறு கேட்டுக்கொண்டார்.

தோழர் கே. ஏ. மதியழகன் நன்றி கூறினர்

பல கிளைக் கழகங்கள் சார்பில் அண்ணு, மற்றையோருக்கும் கைத்தறித் துண்டுகள், மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

★

சோழமாதேவி ஊராட்சி மன்ற வரவேற்பு

19—1—57 மாலை 6½ மணிக்கு கணியூரை அடுத்த சோழமாதேவி ஊராட்சி மன்றச் சார்பில் அண்ணு அவர்கட்கு வரவேற்பளிக்கப்பட்டது. தி. மு. கழகச் சார்பில் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

அண்ணு அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தோழர் கே. ஏ. மதியழகன் சிறிது நேரம் சொற்பொழிவாற்றினர்.

அப்பகுதியிலுள்ள முஸ்லிம் மக்கள் காட்டிய உற்சாகமும், உணர்ச்சியும் குறிப்பிடத்தக்கவையாகும்.

★

கணியூரில் 'சந்திரோதயம்' நாடகம்

அன்று இரவு 10½ மணிக்கு, கணியூர் சுபைதா தியேட்டரில் அண்ணு மற்றும் கழகத் தோழர்கள் நடிக்கும் 'சந்திரோதயம்' நாடகம் நடைபெற்றது.

அண்ணு அவர்கட்கும் ஏனையோருக்கும் கணியூர் தி. மு கழகச் சார்பில் கைத்தறி ஆடைகள், மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

நாடகம் மூலம் கிடைத்தத் தொகை தி மு கழகத் தேர்தல் நிதிக்காக அண்ணு அவர்களிடம் தரப்பட்டது.

மேலும், குமாரலிங்கம் தி. மு. கழகச் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ 20 அண்ணுவிடம் தரப்பட்டது.

இறுதியில் அண்ணு அவர்கள் தேர்தல் நிதி அளித்தமைக்கு நன்றி தெரிவித்தும், தேர்தல் நிலைமைகளை விளக்கியும், தோழர் மதியழகன் வெற்றிபெற கழகத் தோழர்கள் பணியாற்றுமாறு கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினர்.

தோழர் கே. ஏ. மதியழகன் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

★

இணங்கனூர்

20—1—57 காலை 10 மணிக்கு, தோழர் வெ. வாசவன் — தோழியர் சு. மரகதம்; தோழர் சீரங்கன்—தோழியர் இராமாயி திருமணம் தோழர் சுப்பையா இல்லத்தில் அண்ணு தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் என். இரத்தினம் எம்.எல் ஏ., அ. பொன்னம்பலனுர், எம். ஆர். மந்திரன், கா. இராமசாமி, தோழர் ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

★

அம்மன்புதூரில் பொதுக்கூட்டம்

20-1-57 பகல் 12½ மணிக்கு, இணங்கனூரை அடுத்த செல்லாண்டி அம்மன்புதூர் கிராமத்தில் அண்ணு தலைமையில் தி. மு கழகத் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் என். இரத்தினம் எம்.எல்.ஏ, கழகக் கொடியை ஏற்றுவித்தார். தோழர்கள் ஈ வெ. கி. சம்பத், அ பொன்னம்பலனுர் ஆகியோர் தி. மு. கழகமும் தேர்தலில் நம் கடமையும் என்பது குறித்துச் சிறிது நேரம் பேசினபின், இறுதியில் அண்ணு அவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் பட்டக் கஷ்டம், துன்பம, வரிச்சுமை, அடக்குமுறைகள் நீங்க தி மு. கழகத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார் இணங்கனூர் தி. மு. கழகச் சார்பில தேர்தல நிதியாக அண்ணு அவர்களிடம ரூ. 20 கொடுக்கப்பட்டது. அண்ணு, மற்றையோருக்கும் கைத்தறி ஆடைகள், மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

★

அரவக்குறிச்சி ஊராட்சி மன்ற வரவேற்பு

20-1-57 பிற்பகல் 1½ மணிக்கு அண்ணு அவர்களையும் தோழர்கள் ஈ. வெ. கி சம்பத, என். இரத்தினம், அ. பொன்னம்பலனுர் ஆகியோரையும் ஊர்வலமாக அழைத்துச்சென்று ஊராட்சி மன்றச் சார்பில வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அண்ணு, தோழர் என். இரத்தினம ஆகியோர் பேசினர்

(அரவக்குறிச்சி தி. மு. கழகத் தேர்தல நிதி அளிக்கப்பட்ட விவ

(3-ம் பக்கம் பார்க்க)

ரூ. 115 கோடி செலவில் வடக்கே உருவாகும் எஃகுத் தொழிற்சாலை

அமைப்பு முறையில் ஒரு கண்ணோட்டம்

போபால், சன. 24—பிலாயில் ரூ. 115 கோடி செலவில் கட்டப்படும் உருக்குத் தொழிற்சாலையில், 1958-ம் ஆண்டு கடைசியில் உற்பத்தி ஆரம்பமாகும்.

தொழிற்சாலைக்கு நிலக்கரி எடுத்துச் செல்ல, சம்பாவிற்கும் கோர்பாவிற்கும் இடையே உள்ள 24 மைல் தூரத்திற்கும் இரயில்வே பாதை போடப்பட்டுவிட்டது.

ஆக்க வேலைக்கான மின்சார வினியோகத்திற்கு 6 000 கிலோ வாட்ஸ் டீசெல் நிலையத்தை மத்திய பிரதேச அரசாங்கம் முன்னமே ஆரம்பித்திருக்கிறது.

அந்தத் தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் டன் எஃகு உற்பத்தியாகும்.

இந்த உருக்குத் தொழிற்சாலையைச் சுற்றியிலும் அனேக சிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்த மாநில அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

அண்ணா சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நம் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது).

★

மதுரையில் சந்திரோதயம் நாடகம்

20-1-57 மாலை 7 மணிக்கு, மதுரை திறந்த வெளி அரங்கில் 'சந்திரோதயம்' நாடகம் நடைபெற்றது.

நாடக வசூலான ரூ. 5,500 -யும் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு மதுரை மாவட்டச் செயலாளரான தோழர் எஸ். முத்து அவர்கள் அண்ணாவிடம் கொடுத்தார். தோழர் முத்து அவர்களுடைய புதல்வி கொடுத்த கைவிரல் மோதிரத்தை தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் மேடையில் ஏலத்தில் ரூ 55-க்கு விற்றார். இறுதியில அண்ணா அவர்கள் மதுரையில் தி. மு. கழக அபேட்சகராகத் தோழர் எஸ். முத்துவை நிறுத்தியிருப்பதை அறிவித்து, உண்மை உழைப்பாளர் வெற்றிபெறச் செய்ய அனைவரும் பாடுபடும்படி கேட்டுக்கொண்டார்.

★

திருச்சியில் 'சந்திரோதயம்' நாடகம்

திருச்சி, சன 23—தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக, திருச்சி தி மு. கழகச் சார்பில், நேற்று முன்தினம் இரவு, திருச்சி தேவர் மன்றத்தில, அண்ணா அவர்களும் மற்றும் கழகத் தோழர்கள் பலரும் நடிக்கும் 'சந்திரோதயம்' நாடகம் நடைபெற்றது.

நாடகத்தில் வசூலான தொகையில், செலவு போகப் பாக்கி ரூ. 2,500-யும், நகரக் கழகச் செயலாளர் தோழர் மணி அவர்கள் அண்ணாவிடம் தந்தார்.

தேர்தல் நிதியைப் பெற்றுக் கொண்ட அண்ணா அவர்கள் நிதி உதவிய பொதுமக்களுக்கும், நகரக் கழகத்தவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு, அத்தொகையை, மாவட்டச் செயலாளர் தோழர் தர்மலிங்கம அவர்களிடம ஒப்படைத்து, மாவட்டத் தேர்தலுக்காக ஒரு கார் வாங்கிக் கொள்ளுமாறு கூறினார்.

அத்தொகையைப் பெற்றுக் கொண்ட தோழர் தர்மலிங்கம் அவர்கள், அண்ணா அவர்கட்கும நாடகக் குழுவினருக்கும் தமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்.

நாடகத்திற்கான ஒலி ஒளி, மேடை அமைப்புகள் அனைத்தும், திருச்சி தோழர் எஸ் ஏ. ஜி இராபி அவர்களால் மிகச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. (ந-தி.)

நவீன முறையில் டியூப் இல்லாத டயர்கள்!

சென்னை, சன. 23—'குட்இயர்' டயர் கம்பெனியாருக்குச் சொந்தமான அமெரிக்காவிலுள்ள தொழிற்சாலையில் 70-கோடி 'டியூப்' இல்லாத டயர்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாம.

இனி, டயர்களில் உள்ள இரப்பர் குழாய் நிறைய காற்றை நிரப்ப வேண்டிய அவசியம் இராது. மேலும், டியூப்பில் பொத்தல் விழுந்தால் கார் பிரயாணத்திற்குத் தடையும் ஏற்படாது.

தஞ்சையில் பல தொழில் நுணுக்கக் கல்லூரி

தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் பல தொழில் நுணுக்கக் கல்லூரி (பாலிடெக்னிக்) தனிப்பட்டோரால் நிர்வகிக்கப்படும் நிறுவனமாக இருக்குமென்றும், இதற்கு இந்திய அரசாங்கம் ரூ. 10 இலட்சம் மானியமாகவும், சென்னை அரசாங்கம் ரூ 2½ இலட்சமும் அளிக்க முன்வந்துள்ளதாகவும் தஞ்சை கலெக்டர் கூறியுள்ளார்.

ரூ. 5-இலட்சம் செலவில்!

நெல்லிக்குப்பத்தில் முக்கிய எண்ணெய்த் தொழிற்சாலை

நெல்லிக்குப்பம், சன 20—ரூ. 5 இலட்சம் செலவில 1 50 000 பவுண்டுகள் வாசனை எண்ணெய், 50,000 பவுண்டுகள் வண்ண திராவகம் 40,000 பவுண்டுகள் பரிமள எண்ணெய் உற்பத்தி செய்யும் ஓர் தொழிற்சாலையை பாரி கம்பெனியார் இங்கு திறவிருக்கின்றனர்.

4,000டன் கனரக சுவீடன் இயந்திரங்கள்

இந்தியாவுக்கு வந்திருக்கிறதாம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக டில்லி சர்க்கார் ஆர்டர் கொடுத்திருந்த மின்சார ஜெனரேட்டர்கள், கேபிள்கள், பாய்லர்கள், உருக்கு சாமான்கள் போன்ற 4,000 டன் கனரக இயந்திரங்கள் சுவீடனிலிருந்து வந்துள்ளதாகத் தெரிகிறது.

மதுரையில் மனோகரன் நிகழ்ச்சிகள்

13-1-57 மாலை, மதுரை மறுமலர்ச்சி மன்ற 9-வது ஆண்டு விழா, பொங்கல் விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கி. மனோகரன் சிறப்புரை நிகழ்த்தினார்.

14-1-57 மாலை, நாயக்கர்புதுத் தெருவில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் கி. மனோகரன் அவர்கள் கழகத் தேர்தல் ஈடுபாடு குறித்தும், பொங்கல்விழா குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

15-1-57 மாலை 5-மணியளவில் மதுரை அமெரிக்கன் கல்லூரிப் பேரவையின் சார்பில், 'புதுமைக் கவிஞர்கள்' என்ற தலைப்பில் தோழர் கி. மனோகரன் சொற்பொழிவாற்றினார்.

சென்னையில் பொங்கல் நாள் விழா

17-வது வட்டம் :

14-1-57-ல், சென்னை—சூளை தி. மு. கழகச் சார்பில், பொங்கல் விழா சிறப்புறக் கொண்டாடப்பட்டது. தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் செயராமன் பத்திரிகை நிலையம் (அ. பா வீதி) வ. பு. அ சவுந்தரபாண்டியனார் படிப்பகம், கே வி.கே சாமி படிப்பகம், கலைவளர்ச்சி நாடக மன்றம், முத்தமிழ் நாடக மன்றம், மறுமலர்ச்சி மன்றம், தோழர்கள் கே. வி. நீலம், கிருட்டிணன், சு. பாலன், சதாசிவம் கிளைக் கழக இல்லம் ஆகியவைகளில் கழகக் கொடியேற்றி வைத்தார். சிறுவருக்கு, இனிப்பும் பொங்கலும் வழங்கப்பட்டன. விழாவில் தோழர் பொன்னுசாமி பெண் மகவுக்கு 'தமிழ்ச் செல்வி' எனப் பெயரிடப்பட்டதின் நினைவாக தி மு கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

33-வது வட்டம் :

14—1—57 பகல் ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது. மாலை 3 மணிக்கு கிளைக் கழகத்தில தேநீர் விருந்து நடைபெற்றது. தோழர்கள் கு. இளமாறன், கி. வ. மன்னர்மன்னன், தோழியர்கள் சகுந்தலா, திரிபுரசுந்தரி ஆகியோர் பேசினர்.

37-வது வட்டம் :

14—1—57 காலை 8 மணிக்குக் கிளைக் கழகப் பணிமனையில் தோழர் கி. வெ. ஆறுமுகம் கொடி ஏற்றி வைத்தார். தோழர் குமரேசன் தலைமையில், தோழர்கள் ஏ. எல். கே. சாமி, அ. சிவராமன், பொ. நா. சண்முகம், ம கி. இராமலிங்கம், ஜி. எம் தங்கப்பன், கே. ஆர். சீதாராமன் பேசினர். 10 மணியளவில் தோழர் மு. அர்ச்சுனன் தலைமையில் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

44-வது வட்டம் :

14—1—57 காலை 10 மணிக்கு தோழர் பி இராமசாமி தலைமையில் கிளைக் கழகப் பணிமனையில் விழாக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் பலர் பேசினர். ஆயிரம் விளக்கு மாணவர் மன்ற இரவுப் பள்ளி மாணவிகளின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியில் ஏழைகளுக்கு இனிப்புப் பொங்கல் வழங்கப்பட்டது.

அண்ணா படிப்பகம்

14—1—57 காலை 8 மணிக்கு சென்னை—வண்ணை மேற்படி படிப்பகச் சார்பில் சிறுவருக்குப் பொங்கல் வழங்கப்பட்டது. படிப்பகத்தில் தோழர் ச. பெ தங்கையா கொடியேற்றிவைத்தார்.

அழகிரி மன்றம்

14—1—57 காலை 8 மணிக்கு சென்னை—மூலக்கொத்தளம் மேற்படி மன்றச் சார்பில விழாவையொட்டி தோழர் க. அன்பழகன் சிறுவருக்கு இனிப்பு வழங்கினார். தோழர்கள் பலர் பேசினர்.

குயப்பேட்டை

14—1—57 காலை 10 மணிக்கு சென்னை—குயப்பேட்டை 24வது வட்ட தி. மு. கழகப் படிப்பகம திரு வி. க. மறுமலர்ச்சி மன்றம, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மன்றம் ஆகியவை சார்பில விழாவையொட்டி ஊர்வலம் நடைபெற்றது. தோழர் கே. எம். கண்ணபிரான் கழகக் கொடியேற்றினர். இறுதியில் ஏழைகளுக்கு அன்னம் வழங்கப்பட்டது.

சூளை

15—1—57 காலை 8 மணிக்கு சூளை வ. பு. அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகத்தில் தோழர் டி கே. இளங்கோ தலைமையில் கொடியேற்று விழா நடைபெற்றது. சிறுவருக்கு காலைச் சிற்றுண்டி அளிக்கப்பட்டது தோழர்கள் பலர் பேசினர். பிற்பகல் 1 மணிக்கு ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டது.

அண்ணா நாடக மன்றம்

14—1—57ல் 37-வது வட்டம் மேற்படி மன்றத்தில் தோழர் எஸ் சுந்தரம் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் சிவானந்தம், சோ. சு. மணியம், பொன்முடி, குலசேகரன், எட்வர்ட் ஆகியோர் பேசினர். இறுதியில் ஏழைகளுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது.

நெல்லிக்குப்பம் மஜீத் மன்றம்

14—1—57 காலை 10 மணிக்கு சென்னை 12-வது வட்டம் மேற்படி மன்றத்தில் தோழர் பார்த்தசாரதி தலைமையில் விழாக் கொண்டாடப்பட்டது. தோழர்கள் பலர் பேசினர். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

அண்ணா படிப்பகம்

14—1—57 மாலை 3 மணிக்கு, சென்னை - புதுப்பேட்டை மேற்படி படிப்பகத்தில் தோழர் என் எஸ். லோகநாதன் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது தோழர்கள் காரா. சம்பந்தம், சே. கி. சந்திரஉதயம் ஆகியோர் பேசினர். இறுதியில் ஏழைகளுக்குப் பொங்கல வழங்கப்பட்டது.

கே.வி.கே. சாமி படிப்பகம்

14—1—57 அன்று காலை சென்னை 44-வது வட்டம் மேற்படி படிப்பகச் சார்பில் விழா சிறப்புறக் கொண்டாடப்பட்டது. ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது.

இளங்கோ கலை மன்றம்

14—1—57 காலை 9 மணிக்கு, சென்னை வண்ணை மேற்படி மன்றத்தில் சிறுவருக்குப் பொங்கல் வழங்கப்பட்டது. தோழர் வெ. அண்ணாமலை தலைமையில் தோழர்கள் ஏ. எஸ். வேணு, சோ. குசேகர், ப. தம்பிதுரை, வை. சங்கரன், க. கணேசன், கி. வ. க. வேலன், பி. எம் இராமையா ஆகியோர் பேசினர்.

பேராசிரியர் சுந்தரனார் நாடகக் கலைக் கழகம்

15—1—57 சென்னை - சூளை மேற்படி கழகச் சார்பில் விழா சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை சிறுவருக்குப் பாலும் இனிப்பும் பகல் ஏழைகளுக்கு உணவும் அளிக்கப்பட்டது. மாலையில் நாதசுரஇன்னிசையும், தோழர் ச. கோ. நாராயணசாமி தலைமையில் விழாக் கூட்டமும் நடைபெற்றது. தோழர் கண்ணதாசன் பேசினார். தி மு. கழகத் தேர்தல் நிதிக்கு கலைக் கழகச் சார்பில் தோழர் மு மாசிலாமணி ரூ. 50 கொடுத்தார்.

நடிப்புப் புலவர் நாடகக் கழகம்

14—1—57 காலை 10 மணிக்கு மேற்படி கழகச் சார்பில் விழாவையொட்டி தோழர் டி. ஜி. சாமி தலைமையிலும் தோழர் எஸ் எஸ். பி. லிங்கம் முன்னிலையிலும் ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டது. பின்னர் 'அறிவும் செல்வ'மும் என்ற நாடகத் துவக்க விழாவும் நடைபெற்றது.

வள்ளுவர் படிப்பகம்

14—1—57 அன்று, சென்னை கோடம்பாக்கம் மேற்படி படிப்பகச் சார்பில் விழாவையொட்டி ஏழைகளுக்கு தோழர் தி. சு. கிள்ளிவளவன் தலைமையில் பொங்கல் வழங்கப்பட்டது. அன்று இரவு அருந்ததி இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் மறுநாள் தாம்பரம் இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும நடைபெற்றன.

வ. உ. சி. இளைஞர் கழகம்

14—1—57-ல் சென்னை—சேத்துப்பட்டு மேற்படி கழக மனையில் விழாவையொட்டி சிறுவர் சிறுமியருக்கும் மற்றும் கழக உறுப்பினர்களுக்கும் இனிப்புப் பொங்கல் வழங்கப்பட்டது.

வள்ளுவர் பகுத்தறிவு மன்றம்

14—1—57 காலை 11 மணிக்கு சென்னை—மயிலை மேற்படி மன்றத்தில் தோழர் ஆ ஆனந்தன் தலைமையில் விழாக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பி. எஸ்., செட்டியார் எம் சி, பொன். கு. கோதண்டபாணி, கௌதமன், எம். எஸ். மணி, த. லோகநாதன் நா. இராமச்சந்திரன் ஆகியோர் பேசினர். பகலில் தோழர் தட்சிணாமூர்த்தி தலைமையில் ஏழைகளுக்கு பொங்கல் வழங்கப்பட்டது.

கே. வி. கே. சாமி நினைவு மன்றம்

14—1—57 அன்று சென்னை—வண்ணை மேற்படி மன்றத்தில் கொடியேற்று விழாவும் பொங்கல் விழாக் கூட்டமும் நடைபெற்றது. தோழர் ஆர். எல் சுந்தரராசு தலைமையில் தோழர்கள் கி. வி. ஆடலழகன், கலைச்செல்வன், பாலசுப்பிரமணியன் ஆகியோர் பேசினர்.

46-வது வட்டம் :

14-1-57 காலை 10 மணிக்கு, தோழர்கை.பிரமையா தலைமையில், தோழர்கள் இராம. வெள்ளையன், இரா அகமழகன் ஆகியோர் பேசினர். வீதிகள் தோறும் கழகக் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டன. இறுதியில் கழகத் தோழர்கள் ஊர்வலம் சென்று தேர்தல் நிதி திரட்டினர். ஊர்வலத்தின்போது இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் தேர்தல் நிதிக்கு ரூ. 25 கொடுத்தார்.

தி. மு. கழகத் தேர்தல் நிதி உதவு!

சென்னை ஓட்டல் தொழிலாளர்கள் முயற்சி

சென்னை, சன. 24—வருகிற பொதுத் தேர்தலில் ஈடுபட இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தேர்தல் நிதி திரட்டி அளிப்பதென, கடந்த 21-ந் தேதி நடைபெற்ற சென்னை ஓட்டல் தொழிலாளர் கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதற்கென அக்கூட்டத்தில், தோழர்கள் அனந்தராமன் (பிரீமியர் கேப்), ஆ. சடையப்பன் (ஆனந்த விலாஸ்), சு வி. ரங்கசாமி (மாடர்ன் கேப்), எஸ் கருணாநிதி (ஆனந்தா லாட்ஜ்), கே சீனிவாசன் (கிருஷ்ணா லஞ்ச் ஹோம்) ஆகியோரை முறையே கன்வினர், பொருளாளர், உறுப்பினர்களாகக் கொண்ட தேர்தல் நிதிக் குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

வருகிற மாதம் 24-ந் தேதிக்குள் நிதி அளிப்பதென்றும், தொடர்புகொள்ள விரும்புவோர், 'ஆ சடையப்பன், 30, கிடங்கு தெரு' என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதுடன், நன்கொடைச் சீட்டுக்களில் சென்னை மாவட்ட தி. மு. கழக முத்திரை பொறிக்கப் பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது

அரவக்குறிச்சியில் தேர்தல் பணி

அரவக்குறிச்சி ஜன 23—தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், என். இரத்தினம் எம். எல் ஏ., ஆகியோர் அரவக்குறிச்சி பகுதிகளிலுள்ள தி. மு. கழக முக்கியத் தோழர்களையும் மற்றும் பொதுமக்களையும் நேற்று முன்தினம் சந்தித்து, தேர்தல் பணிகள் குறித்தும், தேர்தல் வேலைத் திட்டங்களை விளக்கியும் உரையாடிச் சென்றனர்.

தமிழகத்தில் தேர்தல் நாட்கள்:

தோழர்கள் கவனத்திற்கு

தமிழகத்தில் தேர்தல் நாட்களாக—மார்ச் 1, 4, 6, 8, 11 ஆகிய ஐந்து நாட்களும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன ; அந்த நாட்களில் எந்தெந்தத் தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறும் என்று சென்னை 21—1—57 'நம் நாடு' இதழில் வெளியிடப்பட்டுள்ள விபரங்களைக் கீழ்க்கண்டவாறு திருத்திக் கொள்ளுமாறு கோருகிறோம் :—

முதல் நாள்: மார்ச் 1.

★

மக்கள் சபைத் தொகுதிகள்	சட்டசபைத் தொகுதிகள்
திருவண்ணாமலை :	ஆரணி, போளூர், தரிஞ்சாபுரம், திருவண்ணாமலை.
திருச்செங்கோடு :	தாரமங்கலம், மேட்டூர், சங்கரி, திருச்செங்கோடு.
திண்டிவனம் :	சத்தியமங்கலம், செஞ்சி, திண்டிவனம், வளவனூர்.
கும்பகோணம் :	ஆடுதுறை, கும்பகோணம், பாபநாசம், திருவையாறு.
புதுக்கோட்டை :	திருமயம், ஆலங்குடி, திருக்கோட்டியூர், காரைக்குடி.
தென்காசி :	அம்பாசமுத்திரம், கடையம், தென்காசி, சங்கரனகோயில்.
பெரியகுளம் :	உத்தமபாளையம், போடிநாயக்கனூர், கொடைக்கானல், தேனி.
பொள்ளாச்சி :	உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கோயில்பாளையம், தர்மபுரம்.

இரண்டாம் நாள்: மார்ச் 4.

★

மக்கள் சபைத் தொகுதிகள்	சட்டசபைத் தொகுதிகள்
செங்கற்பட்டு :	மதுராந்தகம், செங்கற்பட்டு, சைதாப்பேட்டை, பொன்னேரி, ஸ்ரீபெரும்புதூர், உத்திரமேரூர், காஞ்சீபுரம்.
கிருஷ்ணகிரி :	கிருஷ்ணகிரி, உத்தனபள்ளி, ஹோசூர், பென்னாகரம், தர்மபுரி.
பேரம்பலூர் :	லால்குடி, டி. பாலூர், அரியலூர், பெரம்பலூர்.
ஸ்ரீவில்லிப்புத்தூர் :	முதுகளத்தூர், அருப்புக்கோட்டை, சாத்தூர், சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர், கோயில்பட்டி, கடம்பூர்.
திருச்செந்தூர் :	திருச்செந்தூர், சாத்தான்குளம், ராதாபுரம், நாங்குநேரி, கன்னியாகுமரி.
கோபிச்செட்டிபாளையம் :	பெருந்துறை, பவானி, கோபிச்செட்டிபாளையம், நம்பியூர்.

'காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்தவேண்டும்'

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, பிரிட்டன் தீர்மானம்?

நியூயார்க், சன 24—

'ஐ.நா. பாதுகாப்புசபை 1952-ம் ஆண்டு டிசம்பரில் நிறைவேற்றிய தீர்மானப்படி காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்தவேண்டும்; காஷ்மீரில் உள்ள இராணுவங்களை வாபஸ் பெறுவதற்காக இந்தியாவும் பாகிஸ்தானும் உடனடியாக பேச்சு வார்த்தை துவங்கவேண்டும்; இருதரப்பாரும் தம்மிச்சையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, நிலையை மேலும் நெருக்கடிக்கு ஆளாக்கக்கூடாது' என்று கோரும் தீர்மானமொன்றை ஐ. நா பாதுகாப்பு சபையில் பிரிட்டனும் அமெரிக்காவும் கொண்டுவரும் என்று தெரியவருகிறது.

சேதுபதி விவகாரம் முடிவாகிவிட்டதாம்

காமராசர் கூறுகிறார்

சென்னை, சன 24—

"பூரணமான பரிசீலனைக்குப் பிறகே மத்திய பார்லிமெண்டரி போர்டு. சேதுபதி (இராமநாதபுரம் இராஜா)வுக்கு டிக்கட் தரவில்லை; எனவே, அவரது கோரிக்கைபற்றி இனி பரிசீலிப்பதற்கு இல்லை இராமநாதபுரத்தில் வேறு காங்கிரஸ் அபேட்சகர் நிறுத்தப்படுவார்" என்று முதன் மந்திரி காமராசர் கூறியிருக்கிறார்.

சேதுபதி, வரும் ஞாயிறன்றோ அல்லது திங்களன்றோ தனது அபேட்சையைத் தாக்கல் செய்வார் என்றும், ஆனால் அவர் எந்தக் கட்சி சார்பில் நிற்பார் என்பது இன்னும் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★

இரா. செழியன் M.A.

(இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இளவல், 'மன்றம்' துணையாசிரியர்)

கரூர் பாராளுமன்ற தொகுதிக்கு நிற்கிறார்

★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டம்

★

மாயூரம் :
நகரப் பூங்காவில்
27—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : கோ. தி. மகேசுவரன
பேசுவோர் :
கி. மனோகரன்
சி. கிருஷ்ணமூர்த்தி
என். கிட்டப்பா

எம். என். ராய் நினைவு தினம்

★

26—1—57 மாலை 5-மணிக்கு, சென்னை-நுங்கம்பாக்கம் சமூக நல மன்றச் சார்பில், குமரப்ப முதலி தெரு, எண் 11 இல்லத்தில் திரு. எம். என். ராய் அவர்கள் நினைவு நாள் கூட்டம் நடைபெறும்.

மாயூரம் நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

27—1—57 இரவு 9 மணிக்கு, எண். 2 ரோடு, 18-ம் இலக்க இல்லத்தில் (மாரியம்மன் கோயில் அருகில்) மாயூரம் நகரக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம், தோழர் கி. மனோகரன் முன்னிலையில் நடைபெறும்

மாயூரம் தி. மு. க. தேர்தல் அலுவலகத் திறப்பு விழா

27—1—57 மாலை 3 மணிக்கு மாயூரம் மாரியம்மன் கோயில் அருகில் எண். 2 ரோடு, 18-ம் இலக்கம் இல்லத்தில் தோழர் ஆர் பழனிச்சாமி தலைமையில் தோழர் பி வெங்கடகிருஷ்ணன் தி. மு. கழகத் தேர்தல் அலுவலகத்தைத் திறந்துவைப்பார்.

அ. பொன்னம்பலனார்

சுற்றுப்பயணம்

சன. 27 : சுப்பிரமணியபுரம் (ஆயக்குடி)
28 : சிக்கத்தம்பூர் (துறையூர்)
30-ந் தேதிமுதல் காஞ்சியில அண்ணாவுடன் தலைவரா

5 மணி நேரம் பேசினார்!

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் வி. கே. கிருஷ்ணமேனன்

நியூயார்க், சன 24—

ஐ நா. பாதுகாப்புச் சபையில், இந்தியாவின் இலாகா இல்லாத மந்திரியான வி. கே. கிருஷ்ணமேனன், நேற்று தொடர்ந்தாற்போல் 5 மணி நேரம் பேசினார் என்று தெரியவருகிறது.

அவர் மொத்தம் 5 மணி 5 நிமிட நேரம் பேசினாராம்.

இது, இந்த ஐ நா. சபையில் உள்ள 'ரிக்கார்டை' விட 85 நிமிடங்களே குறைவானதாம்!

பாகிஸ்தானின் முன்னாள் வெளிவிவகார மந்திரி ஜாபருல்லாகான 1950 பிப்ரவரி திங்களில் மூன்று நாட்களில் மொத்தம் 6½ மணி நேரம் பேசியிருக்கிறார்.

மேனன், தனக்குத் தரப்பட்ட இந்த நேரம் போதுமானதல்ல வென்றும், தான், மற்றொரு மேலும் இரண்டரை மணி நேரம் பேசவேண்டியிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!

சினிமா டைரி

சினிமா சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களும் அடங்கியது

★

உங்கள் அபிமான சினிமா நட்சத்திரங்களின் முகவரி கார் போன் நெம்பர். நடித்த படங்கள் முதலிய விபரங்களுடன். தயாரிப்பாளர்கள், டைரக்டர்கள் சங்கீத டைரக்டர்கள், கதை—வசனம்—பாடல் எழுதுபவர்கள் காமிராக்காரர்கள் எடிட்டர்கள், இன்னும் இதுபோன்ற சினிமா துறையில் பணியாற்றுபவர்களின் போட்டோவுடன் முகவரிகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய புத்தகம் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை.

தனிப்பிரதி விலை ரூ. 2. : தபாலில் ரூ. 2–12–0

வி. பி. பி இடையாது

சுதர்சன் பப்ளிகேஷன்ஸ்

20. கள்ளுக்காரன் தெரு : சென்னை-4

தின்னனூருக்கு அண்ணா வருகை

26—1—57 மாலை 5-மணிக்கு ஸ்ரீபெரும்புதூர் தொகுதி தின்னனூர் தர்மராசாகோயில் திடலில், தோழர் தி. வெங்கடாசலம் தலைமையில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அண்ணா அவர்களும், தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, கோ. செங்குட்டுவன், கௌதமன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

சென்னையில் தேர்தல் நிதியளிப்புக் கூட்டம்

27-1-57 மாலை 6 மணிக்கு, சென்னை கொத்தவால்சாவடி அருகில் ஆச்சாரப்பன் சந்தில் 14-வது வட்டக் கழகச் சார்பில் தோழர் ஏ. டி. வேலு தலைமையில் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், அறிவுடைநம்பி, கோ. செங்குட்டுவன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்

கீரனூர் தி.மு.க. மாணவர் கிளை துவக்க விழா

28—1—57 மாலை 5 மணிக்கு அண்ணா திடலில் தோழர் இ. ச. பழனிசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், அம்பில்-தருமலிங்கம், துரை-மதிவாணன், இரா. முகிலன் மற்றும் பலர் பேசுவர்.

தோழர் கண்ணதாசன் கழகக் கொடியேற்றிவைப்பார்; தோழர் அம்பில்-தருமலிங்கம் அண்ணா உருவப்படத்தைத் திறந்துவைப்பார்.

செங்கற்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளன செயற்குழுக் கூட்டம்

செங்கற்பட்டு, சன. 25—

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தனித் தொகுதிகளில் மேற்படி சம்மேளனச் சார்பில போட்டியிடுவதற்கான அபேட்சகர்கள் தேர்ந்தெடுப்பது குறித்தும், செங்கற்பட்டு ரிசர்வ் தொகுதியில காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடும் திரு. ஏ இரத்தினம் அவர்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை குறித்தும் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு பெரிய நத்தம் காத்தான் தோப்பில், மேற்படி சம்மேளனச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பொதுக்கூட்டங்கள் ஒத்திவைப்பு

26-1-57 அன்று சென்னை—அயனபுரம் பாரதிதாசன் நூல் நிலையச் சார்பில நடைபெற இருந்த பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகிறது.

* * *

27-1-57-ல் புதுவை கோட்டக்குப்பத்தில நடைபெற இருந்த தி மு. கழகப் பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீவைகுண்டம் தொகுதி தேர்தல்குழு உறுப்பினர்கட்கு:

27—1—57ல், ஸ்ரீவைகுண்டம் தொகுதித் தி. மு. கழகத் தேர்தல் குழு உறுப்பினர் கூட்டம் நெல்லை மாவட்டத் துணைச் செயலாளர் டபிள்யூ டி. துரைசாமி தலைமையில் ஸ்ரீவைகுண்டத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் தவறாது வருகைதரக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கடையநல்லூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

27-1-57 இரவு 8 மணிக்கு, தி. மு. கழகத் தேர்தல் அலுவலகக் கட்டிடத்தில் (கடைவீதி பஞ்சாயத்து அலுவலகம் எதிரில்) கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தேர்தல் செயல் முறைகள் குறித்து ஆலோசிக்கப்படும்.

விருதுநகர்வள்ளுவர் சொற்பயிற்சி மன்ற முதலாண்டு விழா

27—1—57 மாலை 6 மணிக்கு மேற்படி மன்ற முதலாண்டு விழா அறிவியல் மன்றப் படிப்பகத்திற்கு முன்னால், தோழியர் சி. ராசம்மாள் தலைமையில் நடைபெறும். தோழர் ஈ. சேதுரகுநாதன், தோழியர் ஜெயலட்சுமி — விவேகானந்தம், தோழர் சுப. அண்ணாமலை ஆகியோர் முறையே 'தமிழகத்தின் கடந்த காலம்—நிகழ்காலம்—வருங்காலம்' ஆகிய தலைப்புகளில் பேசுவர்

சென்னை--கொண்டிதோப்பு ஐக்கிய வாலிபர் சங்க ஆண்டு விழா—பொங்கல் விழா

27—1—57 அன்று,சென்னை—கொண்டித்தோப்பு ஐக்கிய வாலிபர் சங்க 11-வது ஆண்டு விழாவும், பொங்கல் விழாவும் நடைபெறும். காலை 9 மணிக்கு திரு. டி செங்கல்வராயன் தலைமையில் திரு. கே. இராமதாஸ் விழாவைத் துவக்கிவைப்பார். தோழர்கள் எஸ். கணபதி, வேணுகோபால், பான்ஸ் பரமானந்தம், பி. பார்த்தசாரதி, ஆர். ஜார்ஜ், பே. தா. இன்மொழியன் ஆகியோர் பேசுவர்.

மாலை 5 மணியளவில் திரு. எம். கே. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெறும் விழாப் பொதுக்கூட்டத்தில் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பு செல்வராசன், ஆர். ஜார்ஜ், பே தா. இன்மொழியன் ஆகியோர் பேசுவர்.

சுப்பிரமணியபுரத்தில் பொங்கல் விழா

27—1—57 அன்று வள்ளுவர் மன்றச் சார்பில் விழாக் கூட்டம் நடைபெறும். தோழர் அ பொன்னம்பலனார் பேசுவார்.

திராவிட முன்னேற்ற கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.